## சுந்தரத்தோளுடையான்
## வாழி திருநாமம்

காசிய நற்குலத்துதித்த கருணை வள்ளல் வாழியே
கலை அனைத்தும் மறை நான்கும் கண்டறிந்தோன் வாழியே
தேசு புகழ் எதிராசர் திருவடியோன் வாழியே
திருமாலையாண்டான் நற்றிருமகனார் வாழியே
மாசி மிருகசீருடத்தில் வந்துதித்தான் வாழியே
மலையழகர் திருவடியை வணங்குமவன் வாழியே
மாசறவே தமிழ் மறையை வகுத்துரைப்போன் வாழியே
மதமிகு நற்சுந்தராரியன் மலர்ப் பதங்கள் வாழியே

---